**செய்தி வெளியீடு** **நாள்: 25.6.2025**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளையும் வருகின்ற பிப்ரவரி மாதம் 2026-க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளை அலுவலர்கள் முழு உற்சாகத்தோடும், முழு அக்கறையோடும் களப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்**

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (25.6.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் திரு.வி.க. நகர் தொகுதி, பெரம்பூர், **சந்திரயோகி சமாதி சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தையும், கன்னிகாபுரம் விளையாட்டு மைதானத்தையும் மற்றும் புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் கட்டப்பட்டு வரும் சலவைக் கூடத்தையும்** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** சிந்தனையில் உதித்திட்ட உன்னதமான திட்டம் தான் வடசென்னை வளர்ச்சி திட்டம். இந்த திட்டத்தில் ரூபாய் 1000 கோடி என்று முதல் கட்டத்தில் அறிவிக்கப்பட்டு, இரண்டாம் கட்டமாக ரூபாய் 2400 கோடி என்றும், மூன்றாம் கட்டமாக ரூபாய் 6,800 கோடி செலவில் சுமார் 252 பணிகள் முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு, கூடுதலாக மறுபடியும் 29 பணிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இதில் 51 பணிகள் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் நடைபெற்று வருகின்றது. இந்த பணிகளுடைய களஆய்வு இன்றைக்கு துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களும் பெருநகரத்தின் மேயர் திருமதி.பிரியா அவர்களும் எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ்,இ.ஆ.ப., அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய திரு.தாயகம் கவி அவர்களும், முதன்மை செயல் அலுவலர் திரு.சிவஞானம் இ.ஆ.ப., அவர்களும் ஒருங்கிணைந்து இன்றைக்கு இந்த பணிகளை பார்வையிட்டோம்.

குறிப்பாக பெரம்பூர், சந்திரயோகி சமாதி தெருவில் கட்டப்பட்டு வருகின்ற சமுதாய நலக்கூடம் பொருளாதாரம் ரீதியாக மிகவும் நலிவடைந்து இருக்கின்ற அந்த பகுதியில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் அதிகப்படியான வாடகைகள் செலுத்தி திருமணங்கள் நடத்த வேண்டிய சூழல் இருப்பதால் அந்த பகுதியினுடைய மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி.பிரியா அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய** உத்தரவோடு இன்றைக்கு சிறப்பு வாய்ந்த ஒரு சமுதாயக்கூடத்தை 600 இருக்கைகள் அமர்ந்து திருமணத்தை பார்க்கின்ற வகையிலும், சிறப்பான உணவு கூடம், பார்க்கிங் வசதியோடு கூடிய 15 கோடி ரூபாய் செலவில் சமுதாயக்கூடம் கட்டும் பணியை பார்வையிட்டோம். 2025 செப்டம்பர் மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு துறையினுடைய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

Verified @ RealEstate ™

அதைத்தொடர்ந்து வடசென்னை என்றாலே விளையாட்டுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு பகுதி அது பாக்ஸிங் ஆக இருந்தாலும், மற்ற வீர விளையாட்டுகளாக இருந்தாலும் அந்த வகையில் வியாசர்பாடி, கன்னிகாபுரம் கிரவுண்ட் என்பது 60 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த ஓர் மைதானம் அதை புணரமைக்கின்ற பணியிலே 11 கோடி ரூபாய் செலவில் பாக்சிங் மற்றும் கிரிக்கெட், வாலிபால், உடற்பயிற்சி கூடங்கள் பொருந்திய அந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதை செப்டம்பர் மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர இருக்கின்றோம். தற்பொழுது நாம் நின்று கொண்டிருக்கின்ற இந்த இடம் 60 ஆண்டுகளுக்கு முன்பு சலவை தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து சலவைக் கூடம் அமைத்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடம். 60 ஆண்டுகளாக இதனுடைய பராமரிப்பு மேற்பார்வை மேம்படுத்துவது எதுவும் இல்லாத நிலையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** உத்தரவின் பேரில் இந்த சலவை கூடத்தை சுமார் 6 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த **மாண்புமிகு முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டு, தற்பொழுது பணிகள் நடைபெற்று கொண்டு வருகின்றன.

இந்த பணிகளும் 2025 செப்டம்பர் மாத இறுதிக்குள்ளாக அந்த தொழிலாளர்களின் வசம் இந்த சலவைக் கூடத்தை ஒப்படைப்பது மட்டுமல்லாமல் நவீன வசதிகளோடு அதாவது அவர்கள் துணி துவைப்பதற்குண்டான வாஷிங் மெஷின் எந்திரத்தோடு நல்ல காற்றோட்டத்தோடு அவர்களுடைய தொழில் தேவைக்கான தண்ணீர் நிறைய கிடைக்கின்ற அளவிற்கு கழிப்பிட வசதிகள், அவர்கள் உண்டு உறைவிடத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுகின்ற அளவிற்கு அதற்கான அறைகள், அதே போல் வாஷிங் மற்றும் அயனிங் போன்ற அனைத்து பணிகளையும் மிக சுலபமாக இன்றைய நவீன காலத்திற்கு ஏற்றார் போல் செய்வதற்குண்டான அனைத்து பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த அனைத்து பணிகளையும் **மாண்புமிகு முதல்வர் அவர்கள்** தன்னுடைய பொற்கரங்களாலேயே நேரில் வந்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க உறுதி அளித்திருக்கின்றார். வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்ற அனைத்து பணிகளையும் 2025 டிசம்பர் என்று ஒரு பகுதியாகவும், அக்டோபர் என்று ஒரு பகுதியாகவும், ஜனவரி 2026 மற்றும் பிப்ரவரி 2026 என்று ஒரு பகுதியாகவும் பிரித்து எத்தனை பணிகளை நிறைவு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்க முடியுமோ அத்தனை பணிகளையும் நிறைவு செய்கின்ற ஒரு நோக்கத்தோடு இன்றைக்கு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அன்றாட இந்த பணிகளுடைய மேம்பாடு குறித்து துறையினுடைய அதிகாரிகளும் முழு உற்சாகத்தோடும் முழு அக்கறையோடும் இந்த களப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் திரு.சரவணன், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified @ RealEstate™